இந்துசமய அறநிலையத்துறை

# யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாம் 2017–18

தேக்கம்பட்டி – மேட்டுப்பாளையம்

மின்னஞ்சல் : elephantcamp@tnhrce.org

நாள் 06.01.2018

கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், தேக்கம்பட்டி அருள்மிகு வனபத்ரகாளியம்மன் திருக்கோயில் அருகிலுள்ள பவானி ஆற்றுப்படுகையில் நடைபெற்று வரும் யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாமில் மூன்றாம் நாள் நிகழ்வாக யானைகள் நடைபயிற்சி மேற்கொண்டு பூவாளி குளியல் மேடையில் ஆனந்தமாய் நீராடி காலை உணவு மற்றும் சத்து மாத்திரைகள்உண்டு தமது இடங்களுக்கு சென்று ஓய்வெடுக்கத் துவங்கின. கால்நடை மருத்துவக்குழுவினர் அனைத்து யானைகளையும் தனித்தனியே பரிசோதித்து மருத்துவ ஆலோசனைகள் மற்றும் மருந்துகள் வழங்கினர்.

பசுந்தீவனம், சாத உருண்டைகள், கேழ்வரகு களி, பச்சைப்பயிறு ஆகியவற்றுடன் உடலுக்கு வலுவூட்டும் சத்து மாத்திரைகள் ஆகியவற்றை உட்கொண்ட யானைகள் மாலை நடைபயிற்சி செய்து நீராடி தத்தம் இடங்களுக்குச் சென்று ஓய்வெடுக்கத் தொடங்கின.

முகாமில் பாதுகாப்பை வலுவூட்டும் வகையில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள ஐந்து கண்காணிப்பு கோபுரங்களுடன் இன்று புதியதாக ஆறாவது கண்காணிப்பு கோபுரம் நிறுவப்பட்டு முகாமில் இருந்து இன்னும் 200 மீட்டர் தொலைவுக்கு புதியதாக ஒளி உமிழும் நான்கு மின்சார விளக்குகள் கூடுலாக பொருத்தப்பட்டன.

மருத்துவத்துறையினரால் முகாம் நடைபெறும் 48 நாட்களுக்கும் 108 ஆம்புலன்ஸ் வாகனம் ஒன்று முகாம் வளாகத்தில் நிறுத்த அனுமதி அளிக்கப்பட்டதையொட்டி மேற்படி வாகனம் நிறுத்துவதற்கு ஏதுவாக இணை ஆணையர் அறிவுறுத்தலின் பேரில் ஷெட் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது.



